தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 ஆகஸ்ட் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மக்கள் தொடர்பு அதிகாரிகள்.

*236 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மக்கள் தொடர்பு அதிகாரிகள் (**Public Relations Officers**) எந்தெந்த மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

(1) திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.
தலைமையிடம்: திருநெல்வேலி.

(2) மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்.
தலைமையிடம்: மதுரை.

(3) கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.
தலைமையிடம்: கோயம்புத்தூர்.

(4) சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள்.
தலைமையிடம்: சேலம்.

(5) வட ஆற்காடு மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள்.
தலைமையிடம்: வேலூர்.

(6) தஞ்சை மாவட்டம்.

(7) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(8) தென் ஆற்காடு மாவட்டம்.
தலைமையிடம்: கடலூர்.

திரு. ஆ. கு. சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்கள் எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்களில் அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எட்டுப் பேர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அரிசன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று என்னிடம் விவரம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்களுக்குரிய சர்விஸ் கண்டிஷன்கள் பற்றி ரூல்ஸ் விதிக்கப்படவில்லை என்று முதல் அமைச்சரவர்கள் சில மாதங்களுக்கு முன்பு இந்த அவையில் கூறினார்கள். அந்த விதி முறைகள் இப்போதாகிலும் விதிக்கப்பட்டிருக்கின்றனவா? இந்த பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்ஸ் சாதாரணமாக திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் கட்சி வேலை செய்வதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கான விதி முறைகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள் நடக்கிற இடங்களில் வேலை செய்வதாக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அன்றொரு நாள் இப்படிப்பட்ட ஐயம் எழுந்தபொழுது இங்கே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் பொதுவாக அரசாங்கத்தினுடைய பணிகளை விளம்பரப்படுத்துகிற தொண்டினைச் செய்து வருகிறார்கள். அதை முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றாலும், வேறு எந்தக் கட்சி மாநாடு நடைபெற்றாலும் அல்லது திருவிழாக்கள் நடைபெறுகிற நேரங்களிலும் அதிகமாகக் கூட்டம் வருகிற இடங்களில் எல்லாம் அரசாங்கத்தின் சாதனைகளை விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் மாநாடு நடத்தி அதிலே விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டால் அங்கேயும் வந்து விளம்பரப்படுத்தத் தயாராக இருக்கிறார்கள்.

Distillery for Nilgiris

* 237 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to start a potato based distillery at the Nilgiris; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) : நீலகிரி டிஸ்டில்லரிஸ் லிமிடெட் என்னும் தனியார் நிறுவனத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு மற்றும் அம் மாவட்டத்தில் , கிடைக்கும் பழங்களிலிருந்து சாராயத்தையும், பிற மது